ஒன்றிய நீர்பாசன – மின் வாரியத்தால் பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்திற்கு

# தமிழ்நாட்டிற்கு சிறந்த ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை 2024 விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அமைச்சர் துரைமுருகன் காண்பித்து வாழ்த்து!

சென்னை, ஏப்.27-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.4.2025) தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் சந்தித்து, இந்திய அரசின் ஒன்றிய நீர்பாசன மற்றும் மின் வாரியத்தால் (Central Board of Irrigation and Power) உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்திற்கு (World Bank aided Tamil Nadu Irrigated Agriculture Modernisation Project) வழங்கப்பட்ட 2024ஆம் ஆண்டிற்கான “சிறந்த ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை 2024” தேசிய விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

ஒருங்கிணைந்த அணுகுமுறையின் வழியாக, தமிழ்நாடு நீர் மேலாண்மை மற்றும் பாசன நவீனமயமாக்கல் திட்டத்தின் மூலம் வேளாண், கால்நடை மற்றும் மீன்வள உற்பத்தியை மேம்படுத்தியதால், ஒன்றிய அரசின் “சிறந்த ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை 2024” விருது கிடைக்கப்பெற்றது. இத்திட்டத்தின் வெற்றிக்காக, முக்கியமான நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதில் ஏற்பட்ட சவால்களை எதிர்கொண்டு, நீர்வளத்தை மேம்படுத்துதல் மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த உற்பத்தியை அதிகப்படுத்துதல் ஆகியவை இந்த விருதின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வெற்றியானது, நீர்வளத்துறையின் எதிர்கால முயற்சிகளுக்கு பெரும் ஊக்குவிப்பு அளிப்பதாக அமையும்.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டமானது, காலநிலை மாற்றத்திற்கேற்ற பாசன வேளாஎண்மை மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் 34 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, 13.42 லட்சம் ஏக்கர் விவசாய நிலம் பயன் பெற்றுள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டின் 34 மாவட்டங்களில் 15 லட்சத்துக்கும் அதிகமான விவசாயிகளுடைய வருமானம் 25 சதவிகிதம் முதல் 200 சதவிகிதம் வரை அதிகரிக்கப்பட்டது. இத்திட்டம் மூலம் நீர் ஆதார மேம்பாடு மற்றும் புனரமைப்பின் கீழ் 2,626 கண்மாய்கள், 353 தடுப்பணைகள், 5,026 கி.மீ நீளமுள்ள பாசன விநியோகக் கால்வாய்கள் மற்றும் 78 செயற்கை நீர்ச்செறிவூட்டும் கிணறுகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், 1,854 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டு, 20.39 லட்சம் கன மீட்டர் நீர் சேமிப்பதற்கான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மீன்வளத்தில், 703 பாசனக் குளங்கள் மற்றும் 1,258 பண்ணைக் குட்டைகளை பயன்படுத்தி 67,000 ஏக்கரில் நிலையான மீன் வளர்ப்பு ஊக்குவிக்கப்பட்டுள்ளது, இதனால் விவசாயிகளின் தனிநபர் ஆண்டு வருமானம் கூடுதலாக ரூ.90,000 அதிகரிப்பட்டுள்ளது.

வேளாண்மையில், 1.85 லட்சம் ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி முறை (System of Rice Intensification) பின்பற்றப்பட்டு, 10 பில்லியன் கன அடிக்கு மேல் நீர் சேமிக்கப்பட்டுள்ளது. மேலும், 57,000 ஏக்கரில் பாய்ச்சல் மற்றும் காய்ச்சல் முறை (Alternate Wetting and Drying) பின்பற்றப்பட்டு, 25 முதல் 40 சதவிகித மீத்தேன் வெளியேற்றத்தைக் குறைத்துள்ளது. 32,000 ஏக்கரில் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் மூலம் 15,145 விவசாயிகளுக்கு இப்பாசன முறை அமைக்கப்பட்டு நீர் பயன்பாட்டுத் திறன் மேம்படுத்தப்பட்டு சாகுபடி செலவுகளும் குறைக்கப்பட்டுள்ளன.

மின்னணு சந்தை மூலம் ரூ.29 கோடி மதிப்புள்ள 11,687 மெட்ரிக் டன் தானியங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் 36,902 விவசாயிகளும் 3,548 வியாபாரிகளும் பயனடைந்துள்ளனர். வேளான் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் இதுவரை 190 தொழில்முனைவோர்களுக்கு ரூ.625.44 லட்சம் வேளான் சார்ந்த தொழில் தொடங்க நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. கறவைமாடுகளில், தனுவாஸ் கிராண்ட் என்ற திரவ ஊட்டச்சத்து கலவை அளிப்பதன் மூலம் பசுக்களின் பால் உற்பத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்ட இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் தென்காசி சு ஜவஹர், நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை முதன்மைச் செயலாளர் ஆணையர் த. ஆபிரகாம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு செயலாளர் டாக்டர் என். சுப்பையன், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழக துணை வேந்தர் முனைவர் நா. பெலிக்ஸ், நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொறியாளர். சா. மன்மதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சேலம் மாவட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் பட்டாசு வெடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து

# முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்த நிவாரண நிதி உதவியாக தலா ரூ.3 இலட்சம் வழங்கி, குடும்பத்தினருக்கு ஆறுதல்!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் வழங்கினார்!

சேலம், ஏப். 27-

சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் பட்டாசு வெடித்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண நிதியுதவிக்கான காசோலைகளை சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று (26.04.2025) வழங்கி ஆறுதல் தெரிவித்தார்கள்.

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், பூசாரிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் நேற்று (25.04.2025) இரவு சுமார் 8.50 மணியளவில் கஞ்சநாயக்கன்பட்டி திரௌபதி அம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு இருசக்கர வாகனத்தில் பட்டாக மூட்டையை எடுத்துச் செல்லும்போது எதிர்பாராதவிதமாக பட்டாசு தீப் பிடித்து வெடித்ததில் கஞ்சநாயக்கன்பட்டி, கொட்டமேடுவைச் சேர்ந்த திரு.செல்வராஜ் (வயது 29), குருவாலியூரைச் சேர்ந்த சிறுவர்கள் செல்வன். தமிழ்செல்வன் (வயது 11) மற்றும் செல்வன். கார்த்தி (வயது 11) ஆகிய மூன்று நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் இவ்விபத்தில் பலத்த காயமடைந்து சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த கொட்டமேடுவைச் சேர்ந்த திரு. லோகேஷ் (வயது 20) என்பவர் உட்பட 4 நபர்கள் உயிரிழந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களின் உறவினருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் உடனடியாக தெரிவித்துள்ளதுடன், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதனடிப்படையில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் றேற்று (26.04.2025) ஆறுதல் தெரிவித்து தலா 3 இலட்சம் ரூபாய் நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

முன்னதாக பட்டாசு வெடித்து உயிரிழந்தவர்களின் உடலுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்கள் நேற்று அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் விபத்து நடைபெற்ற சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமத்தில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமார், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஜெ. தேவி மீனாள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

கொரியர் பி.முருகன் தலைமை! ஐட்ரீம் இரா.மூர்த்தி - வ.பெ.சுரேஷ் முன்னிலை!

# 52(அ) வட்ட கழகம் சார்பில் தண்ணீர் பந்தல்!

## ஆர்.டி.சேகர் திறந்து வைக்கிறார்! கலாநிதி வீராசாமி - அ.சுபேர்கான் பங்கேற்பு!

சென்னை ஏப்,27

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 52(அ) வட்ட கழக சார்பில் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நீர்மோர் பந்தல் திறப்பு விழா இன்று (27.04.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணியளவில் பாரத் தியேட்டர் ரவுண்டானா அருகில் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் கொரியர் பி.முருகன் தலைமை வகிக்கிறார்.

ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, வ.பெ.சுரேஷ், மூ.கோபி, இரா.செந்தில்குமார், நா.சண்முகம், கீதாசுரேஷ் எம்.சி, கி.ராஜேந்திரன், எம்.எம்.டி. சலாவுதீன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எஸ்.புகழேந்தி, இரா. பாலன், எம்.எல்.ரவி, பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், எம்.கே. இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ்.திருஞானம், வி.மலையம்மாள், இ.மதன், எஸ்.ரமேஷ், வண்ணை புகாரி, ஜி.எஸ். முருகன், த.ஜெயபால், பி.சேகர், கு.சுந்தர், லோ.மோகன், டி.ஜெயலட்சுமி, க.கலைச்செல்வன், ஜி.சதிஷ்குமார், என். கிருஷ்ணன், ஆர். வி.கணேஷ், பி.கண்ணன், கே.கோவிந்தராஜ்,

எம்.முருகன், ஏ.அன்வர், ஏ.ரோமி, கழக க. பாபு, சி.சுலோச்சனம்மாள், பி.அன்சர், டி.சந்திரன், கே.லோகேஷ், வண்ணை டி.ராஜேந்திரன், எம்.முரளிபாலா, எஸ். இளங்கோ, ஆர்.எ.ரஷீத், எஸ்.உதயகுமார், பி.விஜயகுமார், ஏ.காஜாஉசேன், போட்டோமொய்தீன், என்.ஹயாத், வி.மாணிக்கம், எம்.தாமரைகண்ணன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, அ.சுபேர்கான், ஆகியோர் நீர்மோர் பந்தலை திறந்து வைக்கின்றனர்.

தா.இளையஅருணா, ந.மனோகரன், பி.டி. பாண்டிசெல்வம், என்.மருதுகணேஷ், எஸ்.ஆர்.கமலகண்ணன், க.நாகம்மை, எம்.எம்.டி.சலாவுதின், வி. தயாளன், வே.சிவக்குமார், லியோடி.சுரேஷ், கார்த்திக்செங்குட்டுவன், லயன் எம்.தீனதயாளன், ஆர். வி.லட்சுமிவேலு, வெ.சு. சத்தியநாராயணன், சிவராமன், பி.செந்தில்குமார், ஏ.ரமேஷ்பாபு, ப.சோமசுந்தரமூர்த்தி, லயோலா கே.மதன், கே.என்.பார்த்திபன், நா.கஜேந்திரன், செந்தில், த.ரவி, சுவிஸ் இளையராஜா, கோ. ஹரிஸ்குமார், ஜெ.கே. நாதன், சிவா கோ.வேலுமணி, ஆர்.இம்ரான், என். குமார், எஸ்.யுவராஜ், இரா.பொன்முடி, எம். பாலாஜி, எஸ்.சுரேஷ், க.கலைசெல்வன், ஐசிஎப். பழனி, கே.முனுசாமி, ந.பாரி, அத்தோ பி.முனுசாமி, வெ.குமார், எம். என்.வெங்கட், க.லட்சுமணன், டி.ஏ.கோகன், ஜெ.தரணிதரன், முனுசாமி, ஏ.சாந்தாகுமார், கே. சீனிவாசன், வி. விஷால், ஆனந்த், மொய்தீன், கே.கௌரிநாதன், ஏ.சந்துரு, என்.மாலிக், பி.பிரேம், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! புனிதவதி எத்திராசன் எம்.சி. தலைமை!

# திரு.வி.க நகர் வடக்கு பகுதி சார்பில் ‘அன்பே அகத்தின் ஊடகம் அதுவே முதல்வரின் வாசகம்’ புகழரங்கம்!

## இந்து என்.ராம்– பா.கிருஷ்ணன்– சூர்யா சேவியர்– சுகுணா திவாகர் சிறப்புரை!

சென்னை ஏப்:27

சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் திரு. வி.க.நகர் வடக்கு பகுதி தி.மு.க 71 மற்றும் 71(அ) வட்டத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தின் மக்கள் முதல்வரின் மனிதநேய திருவிழாவை முன்னிட்டு, மனிதநேயம் 54 - “அன்பே அகத்தின் ஊடகம்! அதுவே முதல்வரின் வாசகம்” எனும் தலைப்பில் நாளை - 28.4.2025 திங்கட்கிழமை மாலை 6:00 மணிக்கு) மான்போர்ட் பள்ளி வளாகம் பெரம்பூர் சென்னை -11, என்ற இடத்தில் நடை பெரும் மாபெரும் புகழரங்கத்துக்கு மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன் எம்.சி தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்,இந்து சமய அறநிலைத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் தலைவர் பி.கே சேகர் பாபு, மேயர் பிரியா ராஜன்,டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ. வெற்றிஅழகன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், திரு.வி.க நகர் தொகுதி பொறுப்பாளர் தண்டலம் ந. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் புகழ் அரங்கத்தில் இந்து குழுமம் இந்து என்.ராம்,மூத்த பத்திரிகையாளர் பா. கிருஷ்ணன், எழுத்தாளர் சூர்யா சேவியர், பத்திரிக்கையாளர் சுகுணா திவாகர் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

திரு.வி.க நகர் வடக்கு பகுதி கழக செயலாளர் செ.தமிழ்வேந்தன் திருவிக நகர் தெற்கு பகுதி கழக செயலாளர் எம்.சாமிக்கண்ணு, தலைமை பொதுக்குழு உறுப்பினர் மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் சாந்தகுமாரி எம்.சி, சென்னை கிழக்கு மாவட்ட அவை தலைவர் கோ.ஏகப்பன்,மாவட்ட துணைச் செயலாளர் தேவ ஜவஹர், மாவட்ட துணைச் செயலாளர் ஜி.எம் தேவன்,மாவட்ட கழக பொருளாளர் இசட். ஆசாத்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வான வில் விஜய், முன்னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி. லோகேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் லயன் பி. உதயசங்கர் மற்றும் பிஜே. துளசிங்கம், மாவட்ட அயலக அணி தலைவர் பெரம்பூர் ஆர்.மகேஷ்,

மாவட்ட கலைய இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் புரசை ஜி.தாமோதரன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் பாண்டுரங்கன், மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, தலைமை பொது உறுப்பினர் சாவித்திரி வீரராகவன்,மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஜிவி.நாகவல்லி எம்.சி. பகுதி கழக நிர்வாகிகள் தில்லை கதிரவன், புல்லட் கி. ரமேஷ், பெரம்பூர். R. ராஜன் , பி. புனிதவதி, கினார் ஆறுமுகம், ஜெ. மணிகண்டன்,வட்ட கழக நிர்வாகிகள் மா. ருத்ரமூர்த்தி, எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ண குமார், எம்.ஏ.டீக்கா, அபோய்,

மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர் மு. சரவணன் எம்.சி, ரமணி லோகேஷ் எம். சி,தமிழ்ச்செல்வி சசிகுமார் எம்.சி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், BLA-2, BLC, மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

71ஆ வட்டக் கழகச் செயலாளர் பரிமளா சுரேஷ் நன்றி கூறுகிறார்.

க.பாபு தலைமை! க.ஜெயராமன் முன்னிலை!

# பெரம்பூர் 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல்!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்! கலாநிதி வீராசாமி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஏப். 27

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் இன்று (27.04.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி அளவில், பெரம்பூர், எம்.கே.பி. நகர், மெயின் ரோடு, பேருந்து நிறுத்தம் எதிரில் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் 36 (அ) வட்டக் கழகச் செயலாளர் க.பாபு தலைமை வகிக்கிறார்.

பெரம்பூர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் க. ஜெயராமன் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்வாறு 36 (அ) வட்டக் கழகச் செயலாளர் க. பாபு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க திமுக இளைஞர் அணி சார்பில் மண்டலம் 2 மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் ஆவடியில் நடைபெற்றது இதில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன் , ஆகியோர் பல்வேறு ஆலோசனை வழங்கினார்கள் இதில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், கே.வி.லோகேஷ், ம.கிரண், ஜி.கார்த்திகேயன், கணேஷ்குமார், க.ஆனந்த், செ.தினகரன், எஸ்.அருண்ராஜ், வி.பி. தாகப்பிள்ளை, ஜி.துர்கா பிரசாத், ஜெயமணி உள்பட மாவட்ட மாநகர துணை அமைப்பாளர்கள் உள்ளனர்

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ– பி.டி.பாண்டிசெல்வம் பங்கேற்பு!

# மதுரவாயல் தெற்கு பகுதி 154வது வட்ட பாக நிலை குழு உறுப்பினர்கள் (பி.எல்.சி) ஆலோசனை கூட்டம்!

## இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி. பங்கேற்பு – ஆ.செல்வம் அறிக்கை!

சென்னை, ஏப். 27-

மதுரவாயல் 154-வது வட்ட பாகப் பொறுப்பாளர்கள் ஆலேசானைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது. என்று வட்டச் செயலாளர் ஆ.செல்வம். அறிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினரும், பகுதி கழக செயலாளருமான காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ அவர்களின் முன்னிலையில் இன்று ( 27-4-2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில் ராமாபுரம், சாந்தி நகர், சாய் உதயம் மஹாலில் வட்ட கழக அவைத் தலைவர் எஸ். பி.தனவேலு தலைமையில், தலைமை பொதுக் குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வகுமார் எம்.சி ஏற்பாட்டில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் மதுரவாயல் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பி.டி.பாண்டி செல்வம் 154வது வட்டத்திற்குட்பட்ட 21 பாகங்களின் பாக நிலை முகவர்கள் (பி. எல்.ஏ2) பாக நிலை குழு உறுப்பினர்கள் (பி.எல்.சி) அனைவரையும் ஆய்வு மேற்கொண்டு வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலை சந்திப்பது குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

எனவே இந்நிகழ்ச்சிக்கு நமது 154வது வட்டக் கழக நிர்வாகிகள், முன்னோடிகள், கழகத் தோழர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக நிலை முகவர்கள் (பி. எல்.ஏ2) மற்றும் பாக நிலை குழு உறுப்பினர்கள் (பி.எல்.சி) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு ஆ.செல்வம் கேட்டுக் கொற்கிறேன்.

தலைமை பொதுக் குழு உறுப்பினர் இராமாபுரம் வ. செல்வகுமார் எம். சி கூட்டத்திற்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.

இரா.வினோத் தலைமை! அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி– ச.சங்கர்கணேஷ் எம்.சி.பங்கேற்பு !

# வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

சென்னை ஏப்:27

சென்னை தெற்கு மாவட்டம்,வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞரணி கலந்தாய்வு கூட்டம் அயப்பாக்கம் தண்ணீர் தொட்டி அருகில் உள்ள ஒன்றியச் செயலாளர் அலுவலகத்தில் இன்று (27.04.2025 ) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. வினோத் தலைமையில் நடைபெறுகிறது.

ஒன்றிய துணை அமைப்பாளர்கள் கே.கே. செந்தில்குமார், எஸ்.பி. முரளி கிருஷ்ணன், எம். சபரிராஜா,எஸ். ஜனார்த்தனம்,பி. மனிஷ் ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச.சங்கர் கணேஷ் ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளனர்.

ஆகவே நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியதிற்கு உட்பட்ட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், கிளை இளைஞரணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்: இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை, கிளைக் கழகங்களில் இளைஞரணி நிர்வாகிகளை தேர்ந்தெடுக்க படிவங்கள் வழங்குதல்.

3.சமூக வலைதளத்தில் இளைஞரணி செயல்பாடுகள் மற்றும் இளைஞரணி ஆக்கப் பணிகள் குறித்து.